www.ecourtsindia.com

CC.No.119/2023

DATED:- 14.08.2024

PW1:- ரவி,த/பெ. துரைசாமி, வயது 61

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

1. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் வீடு தரகர் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் ரூபாய் 25 லட்சத்திற்கு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வருமான வரி தாக்கல் செய்து வருகிறேனா என்றால் வருமான வரி தாக்கல் செய்ததில்லை. எதிரிக்கு ரூபாய் 15 லட்சம் கடன் கொடுத்ததாக வழக்கு ஆவணங்களில் கூறியுள்ளேன் அதற்கு ஆதாரமாக என்ன ஆவணங்கள் வாங்கி உள்ளேன் என்றால் எதிரியிடமிருந்து வீட்டு பத்திரம் மற்றும் அதன் தாய் பத்திரத்தை வாங்கியுள்ளேன்.

2. மேற்படி ஆவணங்கள் தவிர, எதிரிடமிருந்து ப்ரோ நோட் மற்றும் காசோலை மற்றும் நிரப்பப்படாத ஆவணங்கள் ஏதேனும் வாங்கினேனா என்றால் அவ்வாறு எதுவும் நான் வாங்கவில்லை. ரூபாய் 15 லட்சத்திற்கு மேற்படி வீட்டு சொத்தின் அசல் ஆவணங்களை வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் எதிரி வங்கியில் உள்ள கடனை அடைப்பதற்காக என்னிடம் கடன் பெற்றார் என்று கூறியுள்ளேன் அவர் இருக்கையில் மேற்படி

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTR280023462023/truecopy/order-1.pdf

எதிரியின் வீட்டு பத்திரங்களின் அசல் வங்கியில் தான் இருந்திருக்க முடியும் என்னிடம் இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

3. என்னுடைய சத்திய பிரமாணம் வாக்குமூலத்தில் எதிரி தன்னுடைய வங்கியில் 8 லட்சம் கடன் வைத்துள்ளார் என்றும் அதனை திரும்ப செலுத்துவதற்காக என்னிடம் கடன் கேட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரி வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கியது வில்லங்கச் சான்றிதழில் வெளிப்பட்டது என்றால் சரிதான். மேற்படி, வில்லங்கச் சான்றிதழை நீதிமன்றத்தில் புகார் உடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞரிடம் கொடுத்தேன்.

4. அ.சா.ஆ.1 ஆவணம் கடன் பத்திரம் என்றும் அந்த பத்திரத்தில் எதிரியின் கையொப்பம் மட்டுமே உள்ளது என்றும் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை, எதிரி தான் வாங்கிக் கொண்டு வந்தார்.அ.சா.ஆ.1 ஆவணத்தின் சங்கதிகள் தட்டச்சு செய்யப்பட்டு இருந்தது. எதிரி தான் அந்த ஆவணத்தை தட்டச்சு செய்து என்னிடம் எடுத்து வந்து கொடுத்தார். அடமான பத்திரம் சட்டப்படி பதிவு செய்திருக்க வேண்டும் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTR280023462023/truecopy/order-1.pdf

5. அ.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் யார் போட்டார்கள் என்றால் என்னுடைய நண்பர் மோகன் மற்றும் எதிரியின் மகன் மற்றும் மகள் ஆகியோர் சாட்சி கையொப்பமிட்டார்கள்.அ.சா.ஆ.1 ஆவணம் பக்கம் 2ல் சொத்து பட்டியலில் காணப்பட்டுள்ள சொத்தின் அசல் பத்திரம் என்னிடம் கடனுக்கு ஈடாக கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரி வங்கியில் மேற்படி ஆவணத்தை வைத்து கடன் பெற்று இருக்கும் போது என்னிடம் அவருடைய அசல் ஆவணம் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் வழக்கிற்காக அ.சா.ஆ.1 ஆவணத்தை நான் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர் அறிவிப்பிலும் வங்கியில் உள்ள கடனை அடைப்பதற்காக தான் எதிரி என்னிடம் படம் பெற்றார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.அ.சா.ஆ.1 ஆவணத்தில் எதிரியின் வீட்டு அடமானம் முதல் முறையாக மேற்படி ஆவணத்தின் பெயரில்தான் வைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அ.சா.ஆ.1 அடமான பத்திரத்தின் பெயரில் பணத்தை திரும்ப கேட்டு எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான்.

7. நான் கூறுவது போல் எதிரி பணத்தை பெற்றுக் கொண்டு இரண்டு வருடமாக வட்டி கொடுக்காமல் இருந்திருந்தால்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTR280023462023/truecopy/order-1.pdf

உடனடியாக பணத்தை கொடுக்கக் கோரி நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் எதிரி என்னிடம் எந்த பணமும் பெறவில்லை என்பதால்தான் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு எதிரி பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றும் அதற்கு மறுத்து பதில் அறிவிப்பு எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTR280023462023/truecopy/order-1.pdf